**பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு**

# எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்

# வெற்றிடங்கள்

எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதிபெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி – தோட்ட கண்காணிப்பாளர் - 01 (நிரந்தரம்)**

**தகைமைகள் - வெளிவாரி அபேட்சகர்கள்**

ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விவசாயத்தில் இளமாணிப் பட்டம்.

அத்துடன்

பெருந்தோட்ட தொழில்துறைகளில் தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்பு பயிர் தோட்டத்தில் 03 ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

பெருந்தோட்ட முகாமைத்துவத்தின் டிப்ளோமா சான்றிதழ், விவசாயத்தில் டிப்ளோமா மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் முழுமையான அறிவு மேலதிக தகைமையாக அமையும்.

**உள்ளக**

தரம் 1, கனிஷ்ட முகாமைத்துவ பிரிவில் எல்கடுவ பெருந்தொட்ட நிறுவனத்தின் உதவி தோட்ட கண்காணிப்பாளர் பதவியில் குறைந்தது 5 ஆண்டுகள் அனுபவம்.

| | | |
|---|---|---|
| சம்பள அளவு | - | MM 1-1 - முகாமைத்துவ சேவைகள் திணக்கள சுற்றுநிருப இலக்கம் 01/2025 |
| சம்பளம் | - | ரூபா 91,690- 2480x10-3450x15-Rs.168, 240/- |
| அடிப்படைச் சம்பளம் | - | 2026.01.01 ரூபா 81,710.00 + 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன்படி (அரசு அங்கீகரித்த கொடுப்பனவு) |
| வயது | - | 25 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது. |

**பதவி – உதவி கண்காணிப்பாளர்கள் - 04 (நிரந்தரம்)**

**தகைமைகள் - வெளிவாரி அபேட்சகர்கள்**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து விவசாயத்தில் இளமாணிப் பட்டம்.

மற்றும்

2. கண்காணிப்பு திறனில் தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்பு பயிர் தோட்டத்தில் 01 ஆண்டு அனுபவம்.

**உள்ளக**

தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்பு பயிர் தோட்டங்களில் தரம் 1 முகாமைத்துவ உதவியாளர் பிரிவு பதவியில் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம்.

| | | |
|---|---|---|
| JM 1 – 1 | - | முகாமைத்துவ சேவைகள் திணக்கள சுற்றுநிருப இலக்கம் 01/2025 |
| சம்பளம் | - | ரூபா **72, 650-1360x10-2040x18 –Rs.122, 970/-** |

2026.01.01 ரூபா 65,633 + 01/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன்படி (அரசு அங்கீகரித்த கொடுப்பனவு)

| | | |
|---|---|---|
| வயது | - | 25 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது. |

**ஆட்சேர்ப்பு நடைமுறை**

நியமன நிர்வாகத்தினால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை முடிவு ஒன்றின் அடிப்படையில்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை

| | |
|---|---|
| • தொடர்புடைய மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| • தொடர்புடைய மேலதிக தகைமைகள் | 30 புள்ளிகள் |
| • மற்ற அடைவுகள் | 15 புள்ளிகள் |
| • நேர்முகப்பரீட்சையின் செயல்திறன் | 25 புள்ளிகள் |
| | 100 புள்ளிகள் |

மற்றவை - இந்தப் பிரிவுக்கான அனைத்து ஆட்சேர்ப்புகளும் இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தின் விதிகளுக்கு கண்டிப்பாக இணங்கியதாக அமையும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு சிறந்த பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் - அனைத்து விபரங்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் மற்றும் அனுபவத்தின் பிரதிகளுடன் சேர்த்து விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்தை கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு அனுப்புதல் வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி – கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைப்பதற்கு 2026 மே 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்.

**தலைவர்**
**எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்**
**ரத்வத்த, உக்குவெல.**

**வெளியிடப்பட்ட திகதி 2026.05.05**